# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

முறையீட்டு மனு எண்: 002/2019/மா
ஆணை நாள்: 26–02–2020

திரு. கே. ஆறுமுகம்,
சேலையூர், தாம்பரம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

தாம்பரம், சேலையூர், கற்பகம் நகர், விஜய் பிளாட், எண்.98F என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. ஆறுமுகம் என்பவரது 24.12.2018 நாளிட்ட முறையீடு மனு 24.12.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, முறையீட்டு மனு எண்.002/மா/2019 என எண்ணிடப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

முறையீட்டு மனுதாரர் தனது 24.12.2018 நாளிட்ட முறையீட்டு மனுவில் தான் தாம்பரம் நகராட்சியில் துப்புறவு அலுவலராக பணிபுரிந்து 31.12.2009 அன்று ஓய்வு பெற்றதாகவும், தான் திருச்சியில் நல அலுவலராக பணிபுரிந்த போது, 5-வது ஊதிய குழுவின் பரிந்துரையின்படி ஊதிய உயர்வு நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை என்றும், அந்நிலுவைத் தொகையினை வழங்க ஆணையிடுமாறு கோரியுள்ளார்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் தனது 31.7.2019 நாளிட்ட அறிக்கையில் முறையீட்டு மனுதாரரின் பணிப் பதிவேட்டினை தாம்பரம் நகராட்சியிலிருந்து பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், பணிப் பதிவேட்டினை பெற்றதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 19.9.2019 நாளிட்ட அழைப்பாணையில், முறையீட்டு மனுதாரர் 12.11.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்க ஆணையிடப்பட்டது. ஆனால் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை மற்றும் ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரரின் கோரிக்கையினை பரிசீலித்து உரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலர் 27.2.20

27/2/2020

27/2/2020

பெறுநர்

(1) திரு. K. ஆறுமுகம்,
98 F1, விஜய் பிளாட்,
கற்பகம் நகர், 2வது கிராஸ், சேலையூர்,
தாம்பரம், சென்னை – 600 073.

(2) ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி - 620 001.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ. கோ. / உதரி